**வத்தளை - மாபோல நகர சபை**

**கம்பஹா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 27 ஆந் திகதி செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வத்தளை - மாபொல நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 5,960,000 பெறுமதியான கலிபவுசர் கணக்குகளுக்குக் கொண்டுவரப்படவில்லை.

(ஆ) வருமானம் சார்பாக கிடைத்த ரூபா 177,055 தொகையான 05 காசோலைகள் மதிப்பிழந்தமையின் காரணமாக அந்தப் பெறுமதியை வைப்புக் கணக்கில் வரவு வைத்து கடன்பட்டோர் கணக்கில் செலவு வைத்தமையின் காரணமாக கடன்பட்டோர் மற்றும் வைப்புக் கணக்குகளின் மீதிகள் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) கழிவுப்பொருள் வருமானங்களுக்குரிய மேலதிக செலவுகள் மற்றும் மீதிகளை சீராக்குதல், தனித்தனியாக இனங்காணாமல் 23 நாட்டுகுறிப்புப் பதிவுகள் மூலம் திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்பட்ட பெறுமதி ரூபா 112,600 ஆகும்.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளுக்கும் பட்டோலைகளுக்குமிடையே 05 விடயங்களின் வேறுபாடுகளின் கூட்டுமொத்தம் ரூபா 50,475,610 ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டில் ஆதனவரி பெறுவனவுகளின் கணனி தரவு அறிக்கையின் பிரகாரம் ரூபா 52,179,954 ஆகவும் பேரேட்டின் பிரகாரம் ரூபா 52,639,857 ஆகவும் இருந்தமையால் ரூபா 459,903 வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெற வேண்டிய கணக்குகள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 9,340,982 தொகையான முற்கொடுப்பனவு மீதியில் 2012 திசெம்பர் 01 ஆந் திகதி முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 95,074 தொகையான மீதி மற்றும் 2013 நவம்பர் 25 ஆந் திகதி செலுத்தப்பட்ட ரூபா 3,400,018 தொகை மற்றும் 2013 திசெம்பர் 05 ஆந் திகதி செலுத்தப்பட்ட ரூபா 499,918 தொகை என்பன உள்ளடங்கி இருந்ததுடன் அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

நானாவித வைப்புக் கணக்கில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பட்டோலைகளின் பிரகாரம் மீதி ரூபா 56,764,433 ஆக இருந்ததுடன் அதில் 26 வைப்புக்களில் ரூபா 36,909,983 தொகையான மீதி பல வருட காலமாக மாற்றமின்றி காணப்பட்ட போதிலும் அதனைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 28,634,895 தொகையான நிலுவையாக இருந்த ஏனைய வருமான மீதியில் ரூபா 17,716,942 தொகைக்காக பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 189 | 394,951 | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 2016 ஏப்ரல் 28 ஆந் திகதிய LGD/2/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | 500,000 | 2017 யூன் 09 இல் உள்ளவாறு காலாவதியாகியிருந்த நிலையான வைப்பொன்று உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரமின்றி நடைமுறைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. |

(இ) மேல் மாகாணத்தின் 2008 இன் 1 ஆம் இலக்க நகர கழிவுப் பொருள் முகாமைத்துவ விதி

| | | |
|---|---|---|
| (i) 18(i) | - | கழிவுப்பொருட்களின் தன்மை அல்லது வியாபாரத்தின் சதுர அடி அளவின் பிரகாரம் கட்டணம் அறவிட வேண்டிய இருந்த போதிலும் வருமான பரிசோதகரின் விருப்பத்தின் பிரகாரம் கழிவுப்பொருள் அகற்றல் கட்டணம் தீர்மானிக்கப்பட்டிருந்தது. |
| (ii) 21(1) | | இரண்டாம் பட்டோலையில் குறித்துரைக்கப்பட்ட ‘‘நிலைய தண்டப் பணம்’’ அறவீடு செய்தல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 25,176,255 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 32,115,477 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

வத்தளை மக்கள் வங்கியில் இலக்கம் 222-1-001-7-0976275 என்ற கணக்கு பலவருட காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதில் ரூபா 301,672 தொகையான மீதி காணப்பட்டது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2017<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| வீதவரியும் வரியும் | 55,801 | 55,968 | 53,598 | 55,875 | 57,150 | 58,634 | 66,538 | 60,882 |
| வாடகை | 14,022 | 15,607 | 15,111 | 18,788 | 13,751 | 12,486 | 12,842 | 23,317 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 450 | 1,431 | 1,396 | 1,174 | 1,400 | 1,814 | 2,005 | 1,140 |
| ஏனைய வருமானம் | 79,091 | 36,752 | 35,070 | 28,635 | 79,698 | 58,895 | 52,450 | 26,105 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் ஏனைய வருமானத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 79,091,000 ஆக இருந்ததுடன் அந்த வருமானத்தில் அறவிடப்பட்ட சதவீதம் 44.34 ஆனமையால் அறவீடுகளின் செயன்முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) அனுமதிப்பத்திர கட்டண வருமான மூலத்தில் வியாபார வரி மதிப்பீடு செய்யப்படாதிருக்கும் போது சேகரித்தல்களில் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 2.3.2 வீதவரியும் வரியும்

(அ) வத்தளை நகர மத்தியில் அமைந்துள்ள விடுதி வசதிகள், நிபுணத்துவ சேவை வசதிகள் மற்றும் நவீன தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ள கணிசமான வைத்திய உபகரணங்களையுடைய தனியார் வைத்தியசாலைக்காக 2012 ஆம் ஆண்டின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 20,181,818 ஆக இருந்ததுடன் புதிய அபிவிருத்திகளை இனங்கண்டு ஆரம்ப மதிப்பீட்டுப் பெறுமதியை திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 பெப்ரவரி 14 ஆந் திகதிய முகாமைத்துவக் குழு மூலம் அறவிட வேண்டிய நிலுவை ஆதனவரிப் பெறுமதி ரூபா 50,000 இற்கு மேற்பட்ட, ஆதனங்கள் தடைசெய்யப்பட்டு அவற்றை அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 8,825,221 தொகையான அவ்வாறான 53 நிலுவை ஆதனங்கள் தொடர்பான அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 சனவரி 01 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ஆதனவரி நிலுவை ரூபா 51,932,028 ஆக இருந்ததுடன் அதில் ஆண்டின் போது ரூபா 19,805,812 தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலுவைப் பெறுமதியில் 38 சதவீதம் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தமையினால் நிலுவை ஆதனவரியை அறவிடல் நலிவான நிலையில் காணப்பட்டது.

### 2.3.3 வாடகை

(அ) நகர சபைக்குச் சொந்தமான 16 இறைச்சிக் கடை மற்றும் மீன் கடைகளுக்குரியதாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 4,765,004 தொகையான நிலுவை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மிகவும் சனநெருக்கடி மற்றும் நகரை அண்டி அமைந்துள்ள நகர சபைக்குச் சொந்தமான கடைகளுக்காக 2008 ஆம் ஆண்டின் போது தீர்மானிக்கப்பட்டிருந்த மாதாந்த வாடகைப் பெறுமதி எந்தவித திருத்தங்களுமின்றி அவ்வாறே மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருந்தது.

(இ) ஹெந்தல சந்தைத் தொகுதிக்குரிய கடைகளிலிருந்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய ரூபா 5,933,711 தொகையான நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வத்தளை ஹெந்தல சந்தியில் சந்தைத் தொகுதி காணியில் அமைந்துள்ள கோழி இறைச்சிக்கடையிலிருந்து 2013 முதல் 2015 ஆம் ஆண்டு வரை அறவிட வேண்டியிருந்த ரூபா 613,085 நிலுவை வாடகைப் பணத்தை அறவிடுவதற்காக 2017 பெப்ரவரி 16 ஆந் திகதி உரிய வாடகையாளருக்கு அறவிடல் கட்டளை அனுப்பிய விடயம் தவிர எதிர்கால நடவடிக்கைகளில் முன்னேற்றம் காணப்படவில்லை.

(உ) ஹெந்தல சந்தி சந்தைத் தொகுதியின் பின்பக்கத்தின் 29 கடைகள் மூடப்பட்டிருந்ததுடன் இந்த சந்தைத் தொகுதியை நவீனமயப்படுத்தி வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்காக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், சந்தைத் தொகுதியின் பின்பக்கத்தில் ஒரு பகுதி வாகனங்கள் தரித்து வைக்கும் இடமாகப் பயன்படுத்தப்படுவதை காணக்கூடியதாக இருந்ததுடன் சபை அதற்காக கட்டணம் அறவிட்டிருக்கவில்லை.

### 2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

(அ) நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் வங்கிநடவடிக்கைகளை நடாத்திச் செல்கின்ற 03 வங்கிக் கிளைகளிலிருந்தும், நிதி நடவடிக்கைகளை பேணிச் செல்கின்ற நிதிக் கம்பனிகளிலிருந்தும் மீளாய்வாண்டிற்காக அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சுற்றுலா அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் கீழ் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்துள்ள வெதுப்பகங்களிலிருந்தும் அறவிடப்பட்ட ரூபா 323,671 தொகையான அனுமதிப்பத்திரக் கட்டணத்திற்காக கடந்த ஆண்டில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு புரள்வில் 1 சதவீதம் உரித்தாக்கிக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 ஏனைய வருமானம்

2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அறவிட வேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 3,084,400 தொகையான கழிவுப் பொருள் அகற்றுதல் கட்டண நிலுவை மீதியை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) எதிர்பார்த்த அடைவு மட்டம் பெறப்படாமை**

---

(i) 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 9,475,000 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட 01 ஏக்கர் 31.90 பேர்ச் அளவான காணியில் கழிவுப் பொருட்களை வகைப்படுத்தும் தளமொன்று நிர்மாணிக்கப்பட்டு, கழிவுப் பொருட்களை ஒழுங்குமுறையாக அகற்றும் செயற்திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுமாறு உள்ளூராட்சி ஆணையாளரால் ஆலோசனை வழங்கப்பட்டிருந்துடன் அதற்காக 2016 ஏப்ரல் 02 ஆந் திகதி உள்ளூராட்சி, மற்றும் மாகாண சபைகள் அமைச்சில் இருந்து ரூபா 1,000,000 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், காணியைச் சுற்றி பக்கச் சுவர் நிர்மாணித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) பொலித்தீன் உருக்குவதற்காக உலக வங்கி நிதி உதவியின் கீழ் உள்ளூராட்சி திணைக்களத்திலிருந்து 2017 பெப்ரவரி மாதம் சபைக்கு வழங்கப்பட்ட பேலீன் இயந்திரத்தின் நடவடிக்கைகளுக்காக இரண்டு ஊழியர்களுக்கு தேவையான பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதில் எந்தவித செயல் முன்னேற்றமும் காணப்படவில்லை.

(iii) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் குறிப்பிடப்பட்ட இலக்குகளின் 47 விடயங்களில் 23 விடயங்கள் செயற்படுத்தப்படாதிருந்ததுடன் செயல்முன்னேற்றம் 50 சதவீதம் அல்லது அதற்கு குறைவான மட்டத்தில் காணப்பட்டது.

**(ஆ) இலக்குகளை நிறைவேற்றுவதில் தாமதம்**

---

முன்அலுவலகமொன்றை ஸ்தாபிப்பதற்காக உள்ளூராட்சி திணைக்களத்தால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து தளபாட உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு ரூபா 145,372 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 2018 ஏப்ரல் 05 ஆந் திகதி வரையிலும் அந்த அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

---

(i) சபை அதிகாரப் பிரதேசத்தில் உருவாகின்ற கழிவுப்பொருட்களை முறையாக முகாமைத்துவம் செய்யாமையினால் கழிவுப்பொருட்களை அகற்றுவதற்காக நாளாந்தம் கணிசமான செலவின பொறுப்பொன்றை செய்வதற்கு நகர சபைக்கு ஏற்பட்டிருந்ததுடன் உள்ளூராட்சி ஆணையாளரின் 2008 நவம்பர் 20 ஆந் திகதிய WP/LPD/15/2008 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் கழிவுப் பொருட்களை அகற்றும் போது சுற்றாடலுக்கு சாதகமான முறையான திட்டமொன்றை பின்பற்றுவதற்காக தொடர்ச்சியான வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) 10 சதுர கிலோமீற்றர் அண்ணளவாக நகர அதிகாரப் பிரதேசத்திற்காக 30 இற்கு மேற்பட்ட தொழிலாளர் எண்ணிக்கை ஒன்று கழிவுப் பொருட்களை சேகரிக்கும் செயற்பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் கழிவுப் பொருள் வகைப்படுத்தப்பட்டு பெற்றுக்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டதுடன் கலப்பு கழிவுப் பொருட்களை திறந்த பிரதேசத்தில் கொண்டு போடுவதன் மூலம் அருகிலுள்ள குடியிருப்பாளர்களுக்கும் சுற்றாடலுக்கும் ஆபத்தினை ஏற்படுத்துகின்றமை 2017 நவம்பர் 02 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(iii) கட்டணம் செலுத்தாத வியாபார நிலையங்களின் கழிவுப்பொருட்களை அகற்றுவதற்காக நகரசபையினால் நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக பிரதான வீதியில் மீண்டும் மீண்டும் கழிவுப்பொருட்கள் போடப்பட்டிருந்ததுடன் அந்த நிறுவனங்கள் தொடர்பாக சட்டத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தியிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ நலிவுகள்**

(அ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சிலிருந்து 2014 திசெம்பர் மாதத்தில் கிடைத்த ரூபா 3,995,000 பெறுமதியான உழவு இயந்திரம் மற்றும் கம்பெக்டர் இயந்திரத்தின் முதலாவது சேர்விஸ் செய்தல் வாகனங்களைப் பெற்ற நிறுவனத்திலிருந்து செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், வேறொரு நிறுவனத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டு ரூபா 14,575 தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்த சேர்விஸை செய்தல் 2015 மே 19 ஆந் திகதி முதல் 2015 யூலை 03 ஆந் திகதி வரை தாமதிக்கப்பட்டமையினால் இலவசமாக வழங்கப்படுகின்ற இரண்டாம் மற்றும் மூன்றாம் சேர்விஸ் செய்யப்பட்டமைக்கான சான்றுகள் கோவையில் காணப்படவில்லை. கம்பெக்டர் இயந்திரம் 2016 ஆகஸ்ட் 05 ஆந் திகதி விபத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தமை மற்றும் 2017 யூன் 13 ஆந் திகதி பெகோ இயந்திரத்துடன் மோதுண்டதால் ஏற்பட்ட உடைவின் காரணமாக பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இது தொடர்பான நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. முதலாவது விபத்திற்காக காப்புறுதிக் கம்பனியுடன் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் இரண்டாவது விபத்திற்காக காப்புறுதிக் கம்பனியிலிருந்து ரூபா 48,745 தொகை கிடைத்திருந்த போதிலும், மொத்த பழுதுபார்த்தல் செலவினம் ரூபா 58,200 ஆனமையால் சபைக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 9,455 ஆகும். இந்த நட்டத்திற்குப் பொறுப்பானவர்களை கண்டறிந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நகர சபையின் முன்பள்ளிப் பாடசாலை அபிவிருத்திக்காக 1,999,772 தொகையில் 2017 திசெம்பர் 04 ஆந் திகதி 03 மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு அதாவது 2018 மார்ச் 04 ஆந் திகதி வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தக்காரச் சங்கத்தினால் வேலைகளை ஆரம்பிப்பதற்காக சகலதும் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கும் போது முன்பள்ளி பாடசாலைகளுக்காக புதிய இரண்டு மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்ததாக தொழில்நுட்ப உத்தியோகத்தரால் 2018 மார்ச் 16 ஆந் திகதி செயலாளருக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. சபையினால் திட்டமிடலின்றி செயற்திட்ட முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்படாமையால் இவ்வாறான செயற்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது.

(இ) 2017 இன் பாதீட்டின் மூலம் ரூபா 8,400,000 தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த 03 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக செயலாற்றல் பிணை முறியொன்றைப் பெற்று மீளாய்வாண்டின் இறுதிக் காலாண்டில் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் தொழில்நுட்ப உத்தியோகத்தரால் அந்த உடன்படிக்கை அமுல்படுத்தப்படாதிருந்ததாக செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு அண்மித்த திகதியான 2018 மார்ச் 16 ஆந் திகதி அறிக்கையிடப்பட்டிருந்தது.

**3.3 பெறுகைகள்**

--------------------

**3.3.1 வழங்கல் மற்றும் சேவைகள்**

-------------------------------------------------

(அ) நகர சபை வாகனங்களை சுத்திகரிக்கும் நடவடிக்கைகளுக்காக கொம்பிரஸ்ஸர் மற்றும் வாகனம் கழுவும் நீர்ப்பாய்ச்சும் இயந்திரம் என்பவற்றை கொள்வனவு செய்வதற்காக ரூபா 346,314 தொகை செலவிடப்பட்டிருந்தது. தேவை Motor power HP மற்றும் Motor power K.W. 3.7 ஆக இருந்த போதிலும் Motor Power 3HP மற்றும் Motor power K.W 2.2 இயலளவுடைய கொம்பிரஸ்ஸர் நீர்ப் பாய்ச்சும் இயந்திரம் என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. வேலை அத்தியட்சகரின் சிபார்சுகளை மாத்திரம் அடிப்படையாக கொண்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) நகர மண்டபத்திற்காக விழா மேசைகள் கதிரைகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யும் போது எந்தவித பெறுகை ஆவணங்களிலும் மாதிரிகள் பரீட்சித்தலுக்கு தேவையான தகவல்கள் காண்பிக்கப்படாதிருக்கும் போது இரண்டாவது ஆகக் குறைந்த விலைக் கேள்வி மாதிரி சமர்ப்பிக்கப்பட்டதாக காண்பிக்கப்பட்டு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நிராகரித்திருந்தது. மேலும் பிரதிநிதிகளுக்கான 15 கதிரைகளைக் கொள்வனவு செய்யும் போது விழா மண்டப கதிரைகள் மற்றும் மேசைகள் கொள்வனவு செய்த நிறுவனத்தின் விலையினை மதிப்பிடுவதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் இதற்கான மாதிரிகள் பெறுகை ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்தக் கொள்வனவுகளுக்காக ரூபா 3,542,685 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் இரண்டாவது விலை சமர்ப்பித்த நிறுவனத்துடன் கலந்துரையாடி தீர்வொன்றை எடுத்திருந்தால் ரூபா 910,035 தொகை ஒன்றை சபைக்கு சேமிக்க முடிந்திருக்கும்.

(இ) 4,000 லீற்றர் கொள்வனவு உடைய புதிய கலி பவுசர் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 5,960,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. இதன் போது கூறுவிலை கோருவதற்கான செய்திப்பத்திரிகை அறிவித்தல்களின் பிரகாரம் வாகனம் மற்றும் பவுசர் இரண்டிற்கும் ஒரு கூறுவிலை கோரப்பட்டு 2016 ஒக்தோபர் 17 ஆந் திகதி கூறுவிலை திறக்கப்பட்டிருந்ததுடன் ஆகக்குறைந்த கேள்வி சமர்ப்பித்த நிறுவனம் அவரால் சமர்ப்பிக்கப்பட்ட வாகனத்தை மாத்திரம் கூறி 2016 நவம்பர் 04 ஆந் திகதி அதனை அகற்றுமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் கேள்வி சமர்பபித்த இரண்டாவது ஆகக்குறைந்த கேள்விதாரரால் டிரக் வாகனத்திற்கு கலிபவுசரை பொருத்தும் பணிகள் கேள்வி அகற்றப்பட்டிருந்த ஆகக்குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த நிறுவனத்தினாலே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. ஆகக் குறைந்த கேள்வி கிடைத்த நிறுவனத்திலிருந்து கேள்விப் பிணை பெறப்படாமல் இருந்தமையால் கேள்வியினை நிராகரித்தமை தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாதிருந்தது.

**3.3.2 ஒப்பந்த நிர்வாகம்**

------------------------------

மூலிகைக் கன்றுகளை நடுவதற்கு இடம் ஒன்றைத் தயாரித்தல் ரூபா 367,402 மதிப்பீட்டின் அடிப்படையில் விளையாட்டு அபிவிருத்தி சங்கத்திற்கு கையளிக்கப்பட்டு வேலை பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் ரூபா 265,161 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் இறுதி வேலை விடயமான தரையினை அமைத்தல் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. 2018 பெப்ரவரி 15 ஆந் திகதி பௌதீக பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட திகதி வரையிலும் அந்த இடத்தின் நிலம் சரியான முறையில் செப்பனிடப்படாத இருந்ததுடன் மூலிகைக் கன்றுகளை சரியான பிரகாரம் பராமரிக்காமையினால் அந்தக் கன்றுகள் இறந்திருந்தன.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| | முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | வருமான நிர்வாகம் | வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்காமை மற்றும் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக வழக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை |
| (ஆ) | செயல்திட்டத்தை அமுல்படுத்துதல் | திட்டமிடலின்றி செயற்திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டமை மற்றும் உடன்படிக்கை அமுல்படுத்தப்படாமை |
| (இ) | கழிவுப்பொருள் முகாமைத்துவம் | முறையான திட்டமொன்றும் வேலைத் திட்டமொன்றும் காணப்படாமை |